DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | -- |
| Preliminary Register | : **CC 301/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : கனகராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 18.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18th June 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மைப்பாறையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். 2014ம் வருடம் ஒரு நாள் மாலை 4–4.30 மணியளவில் திருவேங்கடம் காவல்நிலையத்திலிருந்து வந்த போலீசார் மைப்பாறை மேலத்தெருவில் என் வீட்டிற்கு சுமார் 10 வீடு தள்ளி உள்ள ஒரு வீட்டில் வரைபடம் வரைந்துகொண்டிருந்தார்கள். அந்த நேரம் நானும், செல்வராஜ் என்பவரும் வாக்கிங் சென்றுவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது போலீசார் வரைபடம் எடுத்துகொண்டிருந்ததை பார்த்து அங்கு நின்றோம். அப்போது போலீசார் எங்களிடம் வந்து அந்த இடத்திற்கான வரைபடத்தை வரைந்து கொண்டிருப்பதாகவும், அதில் ஒரு கையொப்பம் செய்யுமாறு கேட்டார்கள். நாங்கள் போட்டுக்கொடுத்தோம்.

**பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்ற காகிதத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் புகார் அளித்த நபர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர். புகார் அளித்த நபர் எனது சமுதாயததை சேர்ந்தவர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், பார்வை மகஜர் காவல்நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றாலும், நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதற்கு மாறாக காவல்துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**